www.Padasalai.Net www.TrbTnpsc.com

# T மூன்றாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2025

## ஏழாம் வகுப்பு

நேரம்: 2.00 மணி | சமூகஅறிவியல் | மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5×1=5**

1) மாமல்லபுரத்திலுள்ள நினைவுச் சின்னங்களும், கோவில்களும் யுனெஸ்கோவால் எப்போது அங்கீகரிக்கப்பட்டது?

அ) 1964 ஆ) 1994 இ) 1974 ஈ) 1984

2) ஆகம சூத்திரங்கள் எம்மொழியில் எழுதப்பட்டன?

அ) அர்த்த-மகதி பிராகிருதம் ஆ) இந்தி இ) சமஸ்கிருதம் ஈ) பாலி

3) பொருள்சேதம், உயிரிழப்பு மற்றும் சுற்றுச்சூழலில் பெரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு இயற்கை காரணி ______

அ) இடர் ஆ) பேரிடர் இ) மீட்பு ஈ) மட்டுப்படுத்துதல்

4) சாலை விபத்துக்கள் ஒரு நாட்டின் ______ பாதிக்கின்றன.

அ) முன்னேற்றத்தை ஆ) வாழ்வை இ) பொருளாதாரத்தை ஈ) மேற்கூறிய

5) சேவை வழங்குவதன் அடிப்படையில் விதிக்கப்படுவது ______

அ) செல்வ வரி ஆ) நிறுவன வரி இ) விற்பனை வரி ஈ) சேவை வரி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 5×1=5**

6) மீராபாய் ______ என்பாரின் சீடராவார்.

7) உலகின் தலைசிறந்த மீன்பிடித் தளமாக ______ விளங்குகிறது.

8) காடாஸ்ட்ரல் நிலவரைபடங்கள் ______ என அழைக்கப்படுகின்றன.

9) ______ நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை சரிபார்க்க நுகர்வோர் பாதுகாப்பு துறையின் மகா சாசனம் என்று கருதப்படுகிறது.

10) ______ வரிசுமையை வரி செலுத்துவோர் மாற்ற முடியாது.

**III. சரியா/தவறா என்று எழுதுக. 6×1=6**

11) குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார்.

12) கடவுளை உய்த்துணர உணர்ச்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர்.

13) இராஜசிம்மன் காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டினார்.

14) தாதாபுரம் கோவிலில் விஜயநகர மற்றும் நாயக்கர் கால ஓவியங்களைக் காண முடியும்.

15) 12வது ஆகம சூத்திரம் தொலைந்து போனதாகக் கருதப்படுகிறது.

16) நாளந்தா, தட்சசீலம், விக்கிரமசீலா ஆகியன மிகச்சிறந்த புனிதத்தலங்களாயின.

**IV. பொருத்துக. 5×1=5**

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17) ஆதிநாதர் கோவில் - சமமற்ற மழை
18) கீழக்குயில் குடி - ஓட்டுநர் உரிமம்
19) வறட்சி - சரக்கு மற்றும் சேவை வரி
20) வாகனம் ஓட்டும் உரிமை - மதுரை
21) 01.07.2017 - ஆழ்வார்திருநகரி

**V.** ஏதேனும் 8 வினாக்களுக்கு விடையளிக்கவும்:- **8×2=16**

22) பண்டரிபுரம் விதோபா கோவிலுக்கு துக்காராம் எவ்விதம் பணியாற்றினார்?
23) இராமேஸ்வரம் கோவில் நம் கவனத்தை ஈர்க்கும் விதத்தைக் கூறுக.
24) திரிபிடகாவின் மூன்று பிரிவுகளை விளக்குக
25) எஸ்டான்சியா என்றால் என்ன?
26) நில வரைபட நூலின் வகைகளைக் குறிப்பிடுக.
27) வேறுபடுத்துக:- இடர் மற்றும் பேரிடர்
28) பெண்கள் உரிமையை விளக்குக.
29) சந்தைகளின் வகைகள் மற்றும் அதன் செயல்பாடுகளைப் பற்றி எழுதுக.
30) வாகனம் இயக்கும் போது ஏற்படக்கூடிய கவனச்சிதறல்கள் எவை?
31) சரக்கு மற்றும் சேவை வரி (GST) என்றால் என்ன?
32) வரியின் வகைகள் யாவை? மற்றும் அதனைப் பற்றி விளக்குக

**VI.** ஏதேனும் 3 வினாக்களுக்கு விடையளி:- **3×5=15**

33) விஜயநகர, நாயக்கர் கால கட்டடக்கலையானது பல்லவர் மற்றும் பிற்கால சோழர் கட்டடக் கலையிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என விவாதிக்கவும்.
34) புவி அதிர்ச்சி, அதன் பாதிப்புகள் மற்றும் மட்டுப்படுத்துதல் படிநிலைகள் பற்றி எழுதுக.
35) ஓர் இந்தியன் வாகனம் ஓட்டுவதற்குத் தேவையான ஆவணங்கள் எவை?
36) தென் அமெரிக்காவில் உள்ள பல்வேறு முக்கிய இனங்கள் பற்றி எழுதுக.
37) மக்கள் நலனுக்கு வரி ஏன் அவசியம் என்பதை பற்றி விளக்குக

**VII.** தென் அமெரிக்கா வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்:- **8×1=8**

38) 1. பசிபிக் பெருங்கடல் 2. அட்லாண்டிக் பெருங்கடல்
3. பிரேசில் 4. பெரு 5. உருகுவே
6. சிலி 7. மெகல்லன் ஜலசந்தி 8. கொலம்பியா

********

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com